www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

V12His

விருதுநகர் மாவட்டம்

முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2024

-----

வகுப்பு 12

காலஅளவு: 1.30 மணிநேரம் வரலாறு மதிப்பெண்கள்: 50

பகுதி - I

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 10×1=10

1) இந்தியாவில் ஆங்கிலக் கல்வி எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?

அ) 1825 ஆ) 1835 இ) 1845 ஈ) 1855

2) 'சுயராஜ்யம் எனது பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவேன்' எனக் கூறியவர்

அ) பாலகங்காதர திலகர் ஆ) தாதாபாய் நௌரோஜி

இ) சுபாஷ் சந்திர போஸ் ஈ) பாரதியார்

3) பின்வருவனவற்றுள் எந்த ஒன்று சரியாகப் பொருந்தியுள்ளது?

அ) பங்கிம் சந்திர சாட்டர்ஜி - ஆனந்த மடம்

ஆ) G.சுப்ரமணியம் - விடிவெள்ளிக்கழகம்

இ) மிண்டோ பிரபு - பல்கலைக்கழகச் சட்டம், 1904

ஈ) தீவிர தேசியவாத மையம் - சென்னை

4) "Indian Unrest" என்ற புத்தகத்தின் ஆசிரியர் யார்?

அ) லாலா லஜபதிராய் ஆ) வேலண்டைன் சிரோல்

இ) திலகர் ஈ) அன்னிபெசண்ட்

5) **கூற்று** : ஜின்னாவை 'இந்து - முஸ்லீம் ஒற்றுமையின் தூதர்' என்று சரோஜினி அம்மையார் அழைத்தார்

**காரணம்** : லக்னோ ஒப்பந்தத்தின் தலைமைச் சிற்பி ஜின்னா ஆவார்

அ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான விளக்கமல்ல

ஆ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான விளக்கம்

இ) கூற்று தவறு, காரணம் சரி

ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

6) கீழ்க்கண்டவர்களில் தமிழ்நாட்டில் ஒத்துழையாமை இயக்கத்தில் தலைமையேற்காதவர் யார்?

அ) சி.இராஜாஜி ஆ) எஸ்.சத்தியமூர்த்தி

இ) ஈ.வே.ரா பெரியார் ஈ) திலகர்

7) தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பி காந்தியடிகள் தனது வெற்றிக்கரமான முதலாவது சத்தியாகிரகப் போராட்டத்தைத் தொடங்கிய இடம் ..........

அ) கேதா ஆ) தண்டி இ) சம்பரான் ஈ) பர்தோலி

8) ஜாலியன் வாலாபாக் படுகொலைக்குப் பழிதீர்க்கும் விதமாக 1940 மார்ச் 30 ல் லண்டனில் மைக்கேல் ஓடையரை படுகொலை செய்தவர் யார்?

அ) உதம்சிங் ஆ) பகத்சிங்

இ) ராஜகுரு ஈ) சித்தரஞ்சன் தாஸ்

9) இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?

அ) 1920 ஆ) 1925 இ) 1930 ஈ) 1935

10) முதலாவது பயணிகள் இரயில் 1853 இல் எந்த இடங்களுக்கு இடையே ஓடியது?

அ) மதராஸ் - அரக்கோணம் ஆ) பம்பாய் - பூனா

இ) பம்பாய் - தானே ஈ) கொல்கத்தா - ஹீக்ளி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி - II

II. ஏதேனும் 5 வினாக்களுக்கு குறுகிய விடை தருக. (வி.எண் 17 கட்டாய வினா) 5×2=10

11) அவுரி கலகம் குறித்து குறிப்பு வரைக

12) தொடக்க கால முக்கிய தேசிய வாதிகளைக் கண்டறிக

13) மகாதேவ் கோவிந்த ரானடே சுதேசிக் கொள்கையினை எவ்வாறு விளக்குகிறார்?

14) கிலாஃபத் இயக்கம் துவங்குவதற்கான பின்னணி என்னவாக இருந்தது?

15) புகழ்பெற்ற கோரக்பூர் நீதிபதியான H.E.ஹோம்ஸ் பற்றி நீவிர் அறிவது யாது?

16) இந்தியாவின் நவீன தொழிற்சாலையின் தந்தை என ஜே.என்.டாடா அழைக்கப்படக் காரணம் என்ன?

17) தேசிய வாதிகளால் ரௌலட் சட்டம் ஏன் எதிர்க்கப்பட்டது.

## பகுதி - III

III. ஏதேனும் 5 வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக. (வி.எண் 24 கட்டாய வினா) 5×3=15

18) பிரிட்டிஷ் இந்தியாவில் ஒப்பந்தக் கூலி தொழிலாளர் முறை எவ்வழியில் ஏற்படுத்தப்பட்டது?

19) வ.உ.சிதம்பரத்தின் சுதேசி இயக்க முயற்சிகள் குறித்து எழுதுக.

20) இந்திய சுதந்திரப் போராட்டத்தின் ஒரு அத்தியாயமாக கதார் இயக்கம் கருதப்படுவது ஏன்?

21) சென்னை தொழிற்சங்கத்தின் தாக்கம் மற்றும் முக்கியத்துவம் என்ன?

22) மாகாணங்களில் இரட்டையாட்சி முறை பற்றி எழுதுக

23) சிட்டகாங் ஆயுதப் படைத் தாக்குதலை நடத்த சூரியா சென் எவ்வாறு திட்டமிட்டார்?

24) தென்னந்தியாவில் தொழிற்சங்களின் வளர்ச்சிக்காகச் சிங்காரவேலர் ஆற்றிய பங்களிப்புக் குறித்து எழுதுக.

## பகுதி - IV

IV. அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடை தருக. 3×5=15

25) அ) பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்ற காரணமான சமூகப் - பொருளாதாரக் காரணிகளை ஆய்க

(அல்லது)

ஆ) திலகர் மற்றும் அன்னிபெசண்ட் ஆகியோரின் கீழ் துவக்கப்பட்ட தன்னாட்சி இயக்கங்களின் செயல்பாடுகளை விளக்குக

26) அ) ஒத்துழையாமை இயக்கத்தை நடைமுறைப்படுத்தும் சூழலையும் அதன் விளைவுகளையும் விவரி

(அல்லது)

ஆ) இந்திய விடுதலைப் போரில் மகாத்மா காந்தியடிகளின் பங்கினை மதிப்பிடுக.

27) அ) டாக்டர். அம்பேத்கரின் கல்விப்பணி குறித்து, குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக நீதிக்காக அவரின் செயலூக்கத்தை முதன்மைப்படுத்தி விளக்குக.

(அல்லது)

ஆ) கி.பி. 1900 முதல் கி.பி. 1930 வரையிலான இந்திய தேசிய இயக்கத்தில் ஏதேனும் ஐந்து முக்கிய நிகழ்ச்சிகளை காலக்கோடு வரைந்து காட்டுக.

- - - - - - -

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com